### கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு இல்லத்தில் மீண்டும் சோதனை!

# இந்தப் பூச்சாண்டிக்கெல்லாம் கழகம் அஞ்சாது!

## த.வெ.க. அரசுக்கு – கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எச்சரிக்கை!

**சென்னை, அக். 30 -**

**கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு இல்லத்தில் த.வெ.க. அரசின் லஞ்ச ஒழிப்புத்துறை மீண்டும் சோதனை நடத்துவதையொட்டி விடுத்த வலைதளப் பதிவில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி., “ இந்தப் பூச்சாண்டிக் கெல்லாம் கழகம் அஞ்சாது” என எச்சரித்துள்ளார்.**



அவரது வலைதளப் பதிவு வருமாறு:

கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்களது இல்லத்தில் மீண்டும் சோதனை என்ற பெயரில் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது த.வெ.க. அரசு.

நிர்வாகத் தோல்வியால் எழுந்துள்ள மக்கள் கோபத்தைத் திசைதிருப்பவும், இடைத்தேர்தல் தோல்வி பயத்திலும் சோதனை, கைது என நாடகமாடுகிறது த.வெ.க. அரசு.

இந்தப் பூச்சாண்டிக்கெல்லாம் கழகம் அஞ்சாது!

இவ்வாறு அப்பதிவில் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள் குறிப்பிட்டார்.

### த.வெ.க. ஆட்சியைக் கண்டித்து

# திண்டுக்கல்லில் மகளிர் அணி ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் - முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி - இ.பெ.செந்தில்குமார் அறிக்கை!

திண்டுக்கல், அக். 30 –

த.வெ.க. ஆட்சியில் தமிழ்நாட்டில் சட்டம்– ஒழுங்கு சீர்குலைவு பாலியல் வன்கொடுமை . போதைப் பொருள் கடத்தல் ஆகியவற்றை கண்டித்து திண்டுக்கல் கிழக்கு – மேற்கு மாவட்டக் கழகங்களின் மகளிர் அணி சார்பில் நாளை (அக். 31) மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக மகளிர் அணியினர் திரளாகப் பங்கேற்குமாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள், முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி, இ.பெ.செந்தில்குமார் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.





இது குறித்து அவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் கொலை, கொள்ளை, போதைப் பொருள் விற்பனை போன்றவை அதிகரித்து சட்டம், ஒழுங்கு சீர்கெட்டு இருப்பதோடு, பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகள் கடத்தல் போன்றவை நாள் தோறும் மிகப் பெரிய அளவில் அதிகரித்து வருகிறது. மேலும் தமிழ்நாட்டு மக்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதோடு, தமிழ் நாடு மாநிலமே பாதுகாப்பில்லாத மாநிலமாக மாறி வரும் நிலையினை கண்டுகொள்ளாத தமிழக த.வெ.க. அரசினை கண்டித்து, திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி சார்பில் 31.10.2026, சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் திண்டுக்கல், மணிக்கூண்டு, மாநகராட்சி அலுவலகம் அருகில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளரும், பழனி நகர்மன்றத் தலைவருமான திருமதி.ஆர்.உமா மகேஸ்வரி மற்றும் திண்டுக்கல் மேற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி.கா.மலர்விழிச்செல்வி ஆகியோரின் தலைமை துணைச் செயலாளர்கள் திருமதி. எம்.மார்கரெட்மேரி மற்றும் திருமதி. எம்.தாமரைச்செல்வி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள் திருமதி.தி.இந்திரா மற்றும் திருமதி.கா.முத்து லட்சுமி, திண்டுக்கல் மாநகர துணைச் செயலாளரும், மேயருமான திருமதி.ஜோ.இளமதி, மாநகர அமைப்பாளர்கள் திருமதி. வி.இந்துராணி, அ.அருள்வாணி மற்றும் மாவட்ட, மாநகர மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி தலைவர், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் ஆகியோரின் முன்னிலையிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

அதுசமயம், இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, மாநகர, நகர, பகுதி, பேரூர், கிளை மற்றும் வார்டு கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாநகராட்சி துணை மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், நகர்மன்றம் மற்றும் பேரூராட்சிமன்றத் தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை, வார்டு கழக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் என அனைவரும் ஏராளமான மகளிர்களுடன் கலந்து கொண்டு இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றி பெறச் செய்யவேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.


### தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர் கேட்டைக் கண்டித்து

# தேனி வடக்கு - தெற்கு மாவட்ட மகளிரணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் தங்கதமிழ்ச்செல்வன், எம்.பி, – கம்பம் என்.ராமகிருஷ்ணன் அறிவிப்பு!

தேனி, அக். 30 –

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர் கேட்டைக் கண்டித்து தேனி வடக்கு – தெற்கு மாவட்ட மகளிரணி சார்பில் மாபெரும் போராட்டம் நடைபெறுகிறது என மாவட்டச் செயலாளர்கள் தங்கதமிழ்ச் செல்வன். எம்.பி. – என்.ராம கிருஷ்ணன் ஆகியோர் கூட்டாக அறிவித்துள்ளனர்.





அவர்களது அறிவிப்பு வருமாறு:

தலைமை கழக அறிவிப்பின்படி தேனி வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட கழக மகளிர் அணி சார்பாக தேனி பழைய பேருந்து நிலையம் அருகில் நாளை (31.10.2026 – சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர் கேட்டைக் கண்டித்து போராட்டம் நடைபெறவுள்ளது.

இந்த போராட்டத்தில் மாநில, முன்னாள் மற்றும் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர,பேரூர்,வார்டு,கிளை கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மற்றும் கழக முன்னோடிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள் கிறோம்...

இவ்வாறு தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்ச் செல்வன்.எம்.பி., தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம்.என். ராமகிருஷ்ணன் ஆகியோர் கூட்டாக அறிவித்துள்ளனர்.

### நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி

# 1 வது வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனைகள் வழங்கினார்!

கன்னியாகுமரி, அக். 30 –

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி, 1 வது வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 1 வது வட்ட கழக செயலாளர் த.தங்க ராஜா தலைமையில், நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி செயலாளர் மு.சேக்மீரான் முன்னிலையில் 28.10.2026, புதன்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில் ஆளூர், கலந்தர் நகர் பகுதியில் வைத்து நடைபெற்றது.




கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் செ.தங்கராஜ், அ. அஹமத்ஷா, N.அருள்ராஜ் மோசஸ், கழக நிர்வாகிகள் மு.காதர் சுல்தான், M.மணி மாணிக்கம், ஜாபர் சாதிக், P.நாக சுந்தரம், A.ரெத்தினகுமார், M. டேவிட், பா.பாபு, M.இளங்கோ, S.M.ஷாகுல் ஹமீது, V.செல்வகுமார், சேக், ஆபீத் உட்பட பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

தீர்மானம்: 1 வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 2 கழக பணியினை தொய்வின்றி நடத்த கழக தலைவர் கட்டளையை ஏற்று நடக்கவும், மாவட்ட கழகம் அறிவிக்கும் பணிகளை செவ்வனே நிறைவேற்றி கழகம் மீண்டும் ஆட்சி அமைக்க அயராது பாடுபட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 3 கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி கட்சி வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார் பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி கழகம் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

### அரசு வழக்கறிஞர் நியமனத்தில்

# ரூ.15 லட்சம் லஞ்சம் பெற்ற அமைச்சர் ஆனந்த் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்?

## சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு நெல்லையில் பேட்டி!

நெல்லை, அக். 30 -

அரசு வழக்கறிஞர் நியமனத்தில் ரூபாய் 15 லட்சம் லஞ்சம் பெற்றதாக அமைச்சர் ஆனந்து மீது வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தெரிவித்த பின்னரும் அவர் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்? தேனி சிறையில் இருந்து கைதிகள் தப்பித் தார்களா, தப்பவிடப் பட்டார்களா ?



என சட்டபேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி எழுப் பியுள்ளார்.

திருநெல்வேலி மாவட்ட ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் தற்போது கிடப்பில் போடப்பட்டது குறித்து மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு அளித்த முன்னாள் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கடந்த திராவிட மாடல் ஆட்சியில் நெல்லை மாட்டடம் ராதாபுரம்,நாங்குநேரி மற்றும் களக்காடு உள்ளிட்ட 7 பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்குவதற்காக ரூ.423 கோடி நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் துரிதமாக நடைபெற்று வந்தன. சேரன்மகாதேவி தாமிரபரணி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து சுத்திகரித்து,கடந்த ஜூன் மாதத்திற்குள் சுமார் 50,000 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், புதிய அரசு பொறுப்பேற்ற நாள் முதல் காழ்ப்புணர்ச்சியோடு இத்திட்டத்தை முழுமையாகக் கிடப்பில் போட்டுவிட்டது.

அதேபோல் முன்னாள் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்த வள்ளியூர் துவமனைக்கு மருத்துவர்கள்,செவிலியர்கள் என 160க்கும் மேற்பட்ட பணியிடங்களை நிரப்பாமல் இந்த அரசு காலியாக்கி வைத்துள்ளது.சர்வதேச தரத்தில் இராதாபுரம் அருகே ரூ.15 கோடியில் அமையவிருந்த விளையாட்டு மைதானப் பணிகளும் முடக்கப்பட்டுள்ளன. இந்த மக்கள் நலத்திட்டங்களை உடனடியாகத் தொடங்கவில்லை என்றால் நெல்லையில் மிகப் பெரிய மக்கள் போராட்டம் வெடிக்கும் என்று மாவட்ட ஆட்சியரிடம் எச்சரித்துள்ளோம்.

தேனி சிறையிலிருந்து கைதிகள் தப்பி ஓடியது திட்டமிட்ட நாடகமாகவே தெரிகிறது.சிறைத் துறை மற்றும் மின்துறை அமைச்சரான நிர்மல் குமார், மின் கொள்முதலில் ஒரு யூனிட்டுக்கு ரூ.37 முதல் ரூ.41 வரை முறைகேடு செய்ய முயன்ற மெகா ஊழல் அம்பலமானது. அதைத் திசைதிருப்பவே கைதிகள் தப்பவிடப் பட்டார்களா அல்லது திரைப்படங்களில் வருவது போல போலீஸாரை அடித்துவிட்டு தப்பித்தார்களா என்ற சந்தேகம் எழுகிறது. தமிழக மின்சார வாரியத்திற்கு ரூ.50 லட்சம் கோடி மதிப்பிலான கட்டமைப்பு உள்ளது.அதில் செயற்கை உருவாக்கி, நஷ்டத்தைக் காட்டி ஒட்டுமொத்த மின் துறையையும் அதானி நிறுவனத்திடம் ஒப்படைப் பதே அமைச்சர் நிர்மல் குமாரின் ஒரே திட்டம்.

ரூ.4.91 முதல் ரூ.5.50 வரை குறைந்த விலைக்குக் கிடைக்கக்கூடிய மின்சாரத்தையோ அல்லது ஒப்பந் தப்படி அதானி நிறுவனம் தரவேண்டிய முழு மின்சாரத்தையோ இவர்கள் பெறுவதில்லை.தி.மு.க. எழுப்பிய கடும் எதிர்ப்பின் காரணமாகவே ரூ.37க்கு மின் கொள்முதல் செய்ய விருந்த டெண்டர் தற்போது ரத்து செய்யப்பட்டுள்ளது. இது தி.மு.க. வுக்குக் கிடைத்த வெற்றி.

தற்போது செல்போன், சுங்கச்சாவடி ரீசார்ஜ் போல முன்கூட்டியே ரூ.10,000, ரூ.20,000 பணம் கட்டவைக்கும் 'ப்ரீபெய்ட் ஸ்மார்ட் மீட்டர்' திட்டத்தை பொதுமக்களிடம் திணிக்கப் பார்க்கிறார்கள். மக்கள் பணத்தை முன்கூட்டியே பிடுங்கி தனியார் முதலாளியிடம் கொட்டவே இந்த ஏற்பாடு, த.வெ.க.அரசு பொறுப்பேற்றதுமே ஆவின் பால் கொள் முதலை கடுமையாகக் குறைத்துவிட்டனர். ஆந்திராவைச் சேர்ந்த தனியார் நிறுவனங்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டு, ஆவின் விலையை தொடர்ந்து ஏற்றி மக்களை தனியார் பாலை நோக்கித் தள்ளுகின்றனர்.

அதேபோல சென்னை விமான நிலையத்தையும் தனியாருக்கு கொடுக்கும் ஒப்பந்தத்தில் முதலமைச்சரிடம் ரகசியமாக கையெழுத்து வாங்கியுள்ளனர். ஒரு முதல மைச்சர் என்பவர் 24 மணி நேரமும் விழிப்புடன் இருந்து ஆட்சி நடத்த வேண்டும். படப்பிடிப்புக்குச் சென்று வெடுப்பது போல் செயல் படக் கூடாது.

உளவுத்துறை கொடுக்கும் முக்கியத் தகவல்கள் எதுவும் முதல்வரின் கவனத்திற்குச் செல்வதில்லை. அவரைச் சுற்றியுள்ள குறிப் பிட்ட ஆந்திரா கும்பலும், இடைத்தரகர்களும்தான் அரசை இயக்குகிறார்கள்.

தமிழ்நாட்டில் கஞ்சா, மெத்தபெட்டமைன் உள்ளிட்ட கொடிய போதைப் பொருட்கள் தங்குதடையின்றி புழங்குகின்றன. 2.5 வயது பச்சிளம் குழந்தை மீதான பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட வழக்குகளில் 70 சதவீதத்துக்கும் அதிகமான குற்றவாளிகள் த.வெ.க.நிர்வாகிகளாகவே உள்ளனர்.

இராதாபுரம் கல்குவாரி விவகாரத்தில் கேரளாவுக்கு கனிமவளங்கள் கடத்தப்படுவதை அரசு முழுமையாக, நிரந்தரமாகத் தடை செய்ய வேண்டும். தமிழகத்தில் த.வெ.க.என்ற பெயரில் பச்சையாக பா.ஜ.க.வின் பினாமி ஆட்சிதான் நடக்கிறது.காங்கிரஸ்,ராகுல் காந்தியை நடுத்தெருவில் நிறுத்திவிட்டு பா.ஜ.க.வுடன் மறைமுகக் கூட்டணி வைத்துள்ள இவர்கள் மக்களை ஏமாற்ற முடியாது.

அன்பில் மகேஷ் கைதில் ஆர்வம் காட்டும் ஊழலற்ற ஆட்சி' என்று நாடகமாடும் த.வெ.க.வின் உண்மை முகம் நீதிமன்றத்தில் அம்பலமாகியுள்ளது. அரசு வழக்கறிஞர் பதவிக்காக த.வெ.க. பொதுச்செயலாளர் மற்றும் அமைச்சருமான ஆனந்திடம் ரூ.15 லட்சம் லஞ்சம் கொடுத்ததாக வழக்கறிஞர் ஒருவர் குற்றம் சாட்டிய பிறகும் அவர் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்? என கேள்வி எழுப்பினார்.

இவ்வாறு அவர் கூறி மாவட்ட தலைமை மருத்துவமனின்தட்டுப்பாட்டை விட்டு வந்து வீட்டில் ஓய்வெடுக்கும் ஆனார்.

